வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com　மலர் : 07　12.06.2026 வெள்ளிக்கிழமை　இதழ் : 157　பக்கங்கள் : 08

# சங்கிலியன் பூங்காவில் ஏற்பாடாகியுள்ள புத்தகக் கண்காட்சியில் சீனத் தலையீடு!

## சர்ச்சையையடுத்து அனுமதி வழங்கலை இடைநிறுத்தியது யாழ்.மாநகர சபை

யாழ்ப்பாணம், ஜூன். 12

யாழ்ப்பாணம் நல்லூர் பெருந்திருவிழா காலத்தில், சங்கிலியன் பூங்காவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள புத்தகக் கண்காட்சியில், சீனாவின் வகிபாகம் இருப்பதாக வெளியான செய்தி குறித்து எழுந்த சர்ச்சையை அடுத்து, குறித்த புத்தகக் கண்காட்சிக்கான அனுமதி வழங்கலை யாழ்ப்பாணம் மாநகர சபை இடைநிறுத்தியுள்ளது.

கடந்த நிதிக்குழுக் கூட்டத்தின் போது, சபை ஆணையாளரால் இறுதி நேரத்தில் முன்வைக்கப்பட்ட குறித்த புத்தகக் கண்காட்சி தொடர்பான முன்மொழிவு, யாழ்ப்பாணத்தின் கலை கலாசாரப் பண்பாடுகளையும், நல்லூர் ஆலயத்தையும் பிரதிபலிப்பதாக கொண்டதாகவும், எந்தவொரு பின்னணியும் இல்லாது இருக்குமானால் அதை ஏற்கமுடியும் எனவும், குறித்த குழுவின் உறுப்பினர்கள் கூறிய நிலையில் அது ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

இந்த நிலையில், மறுநாள் குறித்த புத்தகக் கண்காட்சி சீன முனைப்புடன் ஏற்பாடாகுவதாக செய்தி வெளியானது.

இதனையடுத்து நேற்றைய அமர்வில் மாநகரின் முன்னாள் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா, இது குறித்து சுட்டிக்காட்டி, பூகோள அரசியலில் குறித்த விடயம் சிக்காதிருக்கும் வகையில் ஆராயப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படவேண்டும் என பிரஸ்தாபித்தார்.

அண்டை நாடானா இந்தியாவுடன் நெருங்கிய கலை, கலாசாரம் சார் தொடர்புகளைக் கொண்டுள்ள யாழ்ப்பாணம், வேறு கலாசாரத் தொடர்புடைய ஒரு புத்தக கண்காட்சியை அனுமதிப்பதில் அவதானம் செலுத்தவேண்டும் எனவும் வலியுறுத்திய அவர், குறித்த விடயத்தை ஆராய்ந்த பின்னர் அனுமதி வழங்குமாறும் கோரினார்.

அதன் பின்னர் உறுப்பினர் தர்சானந்த், யாழ்ப்பாண வர்த்தகக் கண்காட்சி இந்தியாவின் பின்னணியில்

07

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணைக்கு இடையூறு விளைவிக்கவேண்டாம்!


## நீர்கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூன். 12

உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்கு இடையூறு ஏற்படுத்த வேண்டாம் என வலியுறுத்தி நேற்று வியாழக்கிழமை காலை நீர்கொழும்பு பால்தி சந்தியில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியிருந்ததோடு அமைதியான

07



# 2.5 மில்லியன் டொலர் நிதி மோசடி; நட்டத்தை மக்களே சுமக்கும் நிலை!

## ஹர்ஷ டி சில்வா தகவல்



கொழும்பு, ஜூன். 12

இலங்கையில் இடம்பெற்றுள்ள பெரும் நிதி மோசடி ஒன்றில் இழக்கப்பட்ட 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை மீளப் பெற்றுக்கொள்ள வாய்ப்பில்லை எனவும், அந்த சுமையை இறுதியில் பொது மக்களே சுமக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் பாராளுமன்ற

07

# சர்வதேச உடன்படிக்கைகளை மீறுகின்றார் ஜனாதிபதி அநுர!

## மொட்டு கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன். 12

ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரவதைகளுக்கு எதிரான சர்வதேச உடன்படிக்கைகளை தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மீறி வருவதாக பொதுஜன பெரமுன சார்பில் கடுமையான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பேச்சாளர் சட்டத்தரணி மனோஜ் கமகே இந்த குற்றச் சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரவதைகளுக்கு

07

# யாழ். கலாசார மத்திய நிலையத்தை மாநகரசபை பொறுப்பேற்கவேண்டும்

## நேற்று நடைபெற்ற மாதாந்த அமர்வில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன். 12

யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தை, யாழ்ப்பாணம் மாநகர சபையின் பொறுப்பில் எடுக்கும் நடவடிக்கையை விரைந்து மேற்கொள்ள வேண்டும் என மாநகர சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகரின் மாதாந்த அமர்வு நேற்று முதல்வர் திருமதி மதிவதனி தலைமையில் இடம்பெற்றது.

கலாசார மத்திய நிலையத்தின் பராமரிப்பு குறித்து விவாதிக்கப்பட்டபோது தீர்மானம்

07

# பஸில் ராஜபக்ஷவுக்கு சர்வதேச பிடியாணை?

கொழும்பு, ஜூன். 12

சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் நிதியை முறைகேடாக பயன்படுத்தியதாகக் கூறப்படும் வழக்கில், முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு எதிராக சர்வதேச பிடியாணை பெறுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் எனக் கொழும்பு கோட்டை நீதவான் பசன் அமரசேன தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கு நேற்று முன் தினம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவினருக்கு நீதவான் இந்த அறிவுறுத்தலை வழங்கினார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்துக்கு ஒதுக்கப்பட்டிருந்த 7.8 மில்லியன் ரூபாய் நிதி, அதன் நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாமல், ஊவா மாகாண சபைத் தேர்தலுக்காக 12,000 ரி-சேர்ட்கள் கொள்வனவு செய்ய பயன்படுத்தப்பட்டதாகவும், இதன் மூலம் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டதாகவும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்திருந்தது.

வழக்கின் முதலாவது சந்தேக நபரான பஸில் ராஜபக்ஷவுக்கு மீண்டும் அறிவித்தல் அனுப்புமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் கோரிக்கை விடுத்திருந்த போதிலும், ஏற்கனவே அவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால்

07

## இடம்பெயர்ந்து 37 ஆண்டுகள் பூர்த்தி;

# காணிகளை விடுவிக்குமாறு திங்களன்று வலி.வடக்கு மக்கள் யாழில் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூன். 12

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து 37 வருடங்கள் பூர்த்தியாகும் நிலையில், உயர் பாதுகாப்பு வலயமாகவுள்ள தமது காணிகளை விடுவிக்கக் கோரி, எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கள்கிழமை கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

15 ஜூன் 1990 இல் இடம்பெயர்ந்த மக்கள், 37 வருடங்கள் நிறைவடைந்தும், யுத்தம் நிறைவடைந்தும் இதுவரை மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை.

இந்த நிலையில், கடந்த ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி முதல், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அறவழியில் போராடி வரும் மக்கள்

07

## சாலேயின் மனு;

# விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன். 12

குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் தாம் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட

07

# சங்கீத்சனின் பிணை மனு; கட்டளை 23ஆம் திகதியன்று

யாழ்ப்பாணம், ஜூன். 12

சொல்லிசை கலைஞர் கணேஷன் சங்கீத்சனின் பிணை மனு மீதான கட்டளை எதிர்வரும் 23 ஆம் திகதி அறிவிக்கப்படும் என யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த பிணை மனு நேற்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே, இந்த அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டதாக சங்கீத்சன் சார்பில் மன்றில் முன்னிலையாகிய சட்டத்தரணி கேசவன் சயந்தன் குறிப்பிட்டார்.

07

## தடுப்பு காவலில் சிகிச்சை பெறும்

# சாலேயை தினமும் பார்வையிட அனுமதி கோருகிறார் மனைவி!

கொழும்பு, ஜூன். 12

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் தடுப்புக் காவலில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் சுரேஷ் சாலேயை தினமும் பார்வையிட வாய்ப்பளிக்குமாறு அவரது மனைவியும், சட்டத்தரணியும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின்

07



Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# புற்றுநோயாளர் எண்ணிக்கை இலங்கையில் அதிகரிக்கிறது!

**வைத்திய கலாநிதி ஜெயக்குமாரன்**



யாழ்ப்பாணம், ஜூன். 12

இலங்கையில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் நிலையில் அவர்களுக்கான சிகிச்சை வளங்களில் நோயாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என புற்றுநோய் வைத்திய நிபுணரும் தேசிய புற்றுநோயியல் நிறுவன ஆலோசகருமான வைத்திய கலாநிதி நடராஜா ஜெயக்குமாரன் தெரிவித்தார்.

நேற்று முன் தினம் புதன்கிழமை யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற மறைந்த பேராசிரியர் நாகலிங்கம் சுந்தரலிங்கம் ஞாபகார்த்த நிகழ்வில் பேருரை ஆற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புற்றுநோய் இலங்கையில் மட்டுமல்ல உலகத்தில் உள்ள பல நாடுகளில் தாக்கம் அதிகரித்துள்ள தன்மையை கொண்டுள்ளது.

இந்தப் புற்றுநோய் உருவாவதற்கு பல்வேறு காரணங்கள் காணப்படுகின்ற நிலையில் பொதுவாக உணவுப் பழக்கங்கள் இந்த நோய்க்கு ஆரம்ப கர்த்தாவாக அமைகின்றன.

உலகமயமாக்கலின் விளைவாக இரசாயன உரங்கள், கிருமி நாசினிகள் உணவுப் பொருள்களுக்கு அதிகம் பயன்படுத்தப் படுகின்ற மையால் புற்று நோயின் தாக்கம் அதிகரித்துச் செல்கின்றது.

உடற்பயிற்சி மற்றும் பாதுகாப்பான உணவு பழக்கவழக்கங்களை கடைப்பிடிப்பதன் மூலம் இந்த நோய் வராமல் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

இலங்கையில் புற்றுநோயாளர் ஒருவர் தனது சிகிச்சையை விரும்பிய இடத்தில் பெறுவதற்கான உத்தரவாதங்கள் வழங்கப் பட்டுள்ளன.

ஆகவே புற்று நோய் வராமல் தடுப்பதற்கு சுகாதார வழிகாட்டல்கள் மற்றும் வாழ்க்கை முறைகளில் மாற்றங்களை கொண்டு வரவேண்டும்-என்றார். (அ)

## கண்ணிவெடி அகற்றும் பணிகளை அமெரிக்க பிரதிநிதி நேரில் பார்வை

கிளிநொச்சி, ஜூன். 12

அமெரிக்க வெளியுறவுத்துறையின் அரசியல் இராணுவ விவகாரங்கள் பணியகத்தின் ஆயுத அகற்றல் மற்றும் பாதிப்பு குறைப்பு அலுவலக திட்ட முகாமையாளர் கீத் டி கிளார்க் நேற்று கிளிநொச்சி மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது, அமெரிக்க அரசின் நிதியுதவியுடன் டாஸ் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் அமைப்பினால் பளை அரசர்கேணி பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை அவர் நேரில் பார்வையிட்டார்.

தொடர்ந்து, பளை மத்திய கல்லூரியில் வெடிபொருள் அபாயம் தொடர்பாக மாணவர்களுக்காக நடத்தப்பட்ட விழிப்புணர்வு கருத்தரங்கிலும் அவர் கலந்துகொண்டார். நிகழ்வின் நிறைவில், பாடசாலையின் பயன்பாட்டுக்காக 30 கதிரைகளையும் வழங்கினார். (அ)

## ரூபாய் மதிப்பு திடீரென உயர்வு

கொழும்பு, ஜூன். 12

ஏற்றுமதியாளர்களின் டொலர் மாற்றத்திற்கான கால எல்லையை மத்திய வங்கி 30 நாள்களாகக் குறைத்ததை அடுத்து, அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின்மதிப்பு அதிகரித்துள்ளது.

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் மதிப்பு முன்னைய நாளின் மாற்று வீதமான 337.00/75 இலிருந்து, தற்போது 332/334 ரூபாய் வரை உயர்வடைந்துள்ளது.

அத்துடன் நேற்றைய வர்த்தக நடவடிக்கைகளின் போது ரூபாயின் மதிப்பு 336.50 என்ற உச்ச மட்டத்திலிருந்து 328.00 ரூபாய் என்ற குறைந்தபட்ச மட்டம் வரை பதிவாகியிருந்தது.

இதேவேளை, அமெரிக்க டொலருக்கு எதிரான தந்தி பரிமாற்ற வீதத்தின் அடிப்படையில், கொள்வனவு விலை 332.3805 ரூபாயாகவும், விற்பனை விலை 342.0821 ரூபாயாகவும் பதிவாகியுள்ளது. (அ)

## பேராசிரியர் நாகலிங்கம் சுந்தரலிங்கம் நினைவுப் பேருரை யாழ்.பல்கலையில்!



யாழ்ப்பாணம், ஜூன். 12

மறைந்த மருத்துவ இயற்பியல் பேராசிரியர் நாகலிங்கம் சுந்தரலிங்கம் நினைவுப் பேருரை நேற்று முன் தினம் புதன்கிழமை யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் ஜனாதிபதி நோய் தணிப்பு பராமரிப்பு சங்கத் தலைவர் ப்ரீத்தி விஜய குணவர்த்தன தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வட பிராந்தியத்தில் முன்னோடி புற்று நோய் சிகிச்சை ஆரம்ப கால அனுபவங்களும் நீடித்த படிப்பினைகளும் என்ற தொனிப் பொருளில் மறைந்த மருத்துவ இயற்பியல் பேராசிரியர் நாகலிங்கம் சுந்தரலிங்கம் காலத்தில் சேவையாற்றிய மருத்துவ புற்றுநோயியல் ஆலோசகர் வைத்திய கலாநிதி நடராஜா ஜெயக்குமாரன் நிகழ்த்தினார்.

நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி சுரேந்திரகுமார், இயற்பியல் பேராசிரியர் என்.ரவிராஜன், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் சிறி சற்குணராஜா, யாழ்.பல்கலைக்கழக விவசாயத்துறை பிடாதிபதி பகீரதன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் முரளிதரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (அ)

## ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்கு தீர்வு காணக் கோரி கையெழுத்துப் போராட்டம்

வவுனியா, ஜூன். 12

ஆசிரியர்களின் பல்வேறுபட்ட பிரச்னைகளுக்கு தீர்வு வழங்க வலியுறுத்தி வவுனியாவில் நேற்று முன் தினம் ஆசிரியர்கள் கையெழுத்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அனைத்து பாடசாலைகளிலும் பாடசாலை நிறைவின் பின்னர் பிரதான வாயிலுக்கு வந்த ஆசிரியர்கள் கையெழுத்துப் போராட்டத்தை மேற்கொண்டதோடு தமது கோரிக்கையை நிறைவேற்றுமாறும்



தெரிவித்திருந்தனர்.

இதேவேளை, வவுனியா முஸ்லிம் மகாவித்தியலயத்துக்கு முன்பாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தினர் கையெழுத்து போராட்டத்தை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வளர்ப்பு நாய்களை துன்புறுத்திய குற்றச்சாட்டில் முதியவர் கைது!

கொழும்பு, ஜூன். 12

நீர்கொழும்புப் பகுதியில் இரண்டு வளர்ப்பு நாய்களை மனிதாபிமானமற்ற முறையில் துன்புறுத்திய குற்றச்சாட்டில் முதியவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு, வெல்ல வீதி பகுதியிலுள்ள ஒரு வீட்டில் வளர்க்கப்பட்டு வந்த இரண்டு நாய்களுக்கு, அவற்றின் உரிமையாளர் மனிதாபிமானமற்ற முறையில் துன்புறுத்துவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில், நீர்கொழும்பு பொலிஸ் நிலைய அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு, சந்தேகநபரான நாய் உரிமையாளரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட வேளையில் நாய்களின் வாய்கள் நூல் போன்ற ஒன்றால் கட்டப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் அதிகாரிகள் நாய்களை பாதுகாப்பாக தங்களது பொறுப்பில் எடுத்துள்ளனர்.

67 வயதுடைய சந்தேகநபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

## சங்கீத்சனை விடுவிக்கக் கோரி மன்னாரில் நேற்றுப் போராட்டம்

மன்னார், ஜூன். 12

பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராகவும் கைது செய்யப்பட்டுள்ள சொல்லிசை பாடகர் சங்கீதனை விடுதலை செய்யக் கோரியும், இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளை ஏற்பாடு செய்த போராட்டம் நேற்று காலை மன்னார் அரச பஸ் தரிப்பிடத்திற்கு முன்பு இடம்பெற்றது.

இந்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து பொது அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள், மன்னார் பிரஜைகள் குழு, மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை சங்கத்தினர், அரசியல் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்புக்கள் உள்ளடங்களாக நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

பயங்கரவாத தடைச் சட்டம் ரத்து செய்யப்படவேண்டும், கைது செய்யப்பட்ட பாடகர் உட்பட பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக சிறையில் உள்ள அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும். இதற்கு ஜனாதிபதி துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர். (அ)

## ஜூன் 14 உலக இரத்த தான தினம்

கொழும்பு, ஜூன். 12

நோயாளி ஒருவருக்குப் பாதுகாப்பான இரத்தத்தை வழங்க வேண்டிய கடப்பாடு நமக்கு இருக்கிறது. இப்படிப் பாதுகாப்பான இரத்தத்தை வழங்க வேண்டுமானால், தன்னிச்சையாக முன்வந்து இரத்த தானம் வழங்குவோர் நமக்குத் தேவைப்படுகிறார்கள் என விசேட வைத்திய நிபுணர் ஆஷா டி சில்வா தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜூன் 14 ஆம் திகதி நமக்கு ஒரு விசேடமான நாள் அதன் படி, இந்த வருடத்திலும் வரும் ஞாயிற்றுக்கிழமை, உலக இரத்ததான தினம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது. நோயாளி ஒருவருக்குப் பாதுகாப்பான இரத்தத்தை வழங்க வேண்டிய கடப்பாடு நமக்கு இருக்கிறது. இப்படிப் பாதுகாப்பான இரத்தத்தை வழங்க வேண்டுமானால், தன்னிச்சையாக முன்வந்து இரத்த தானம் வழங்குவோர் நமக்குத் தேவைப்படுகிறார்கள்.

கடந்த 2014 ஆம் ஆண்டிலேயே உலக சுகாதார அமைப்பு இலங்கையை தன்னிச்சையாக முன்வந்து 100மூ இரத்த தானம் வழங்கும் நாடாக அங்கீகரித்துள் ளது. உலகில் உள்ள மற்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது, உலகில் உள்ள சுமார் 70 நாடுகள் மட்டும்தான் இந்த நிலையை அடைந்துள்ளன-என்றார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
12.06.2026 வெள்ளிக்கிழமை
பராபவ வருடம், வைகாசி 29

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## மாகாணசபை தேர்தல்கள் பற்றிய பிரதமரின் "தெளிவான" அறிவிப்பு

தற்போது நடைமுறையில் இருக்கும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் மாகாண சபை தேர்தல்கள் நடத்தப்படமாட்டாது என்றும் பதிலாக, புதிய தேர்தல் முறையின் கீழேயே அவை நடத்தப்படும் என்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் நிலைப்பாட்டை தெளிவாக அறிவித்திருக்கிறார்.

எதிரணி பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவின் கேள்வியொன்றுக்கு பதிலளித்த பிரதமர், மாகாண சபைகளில் பெண்களுக்கும் இளைஞர்களுக்கும் போதுமான அளவில் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்யாமல் தேர்தல்களை நடத்துவதில் எந்த நியாயமும் இல்லை என்றும் தேர்தல்களை நடத்துவதற்கு முன்னதாக தேர்தல் முறைச் சீர்திருத்தங்களை நிறைவு செய்ய வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடு என்றும் கூறியிருக்கிறார்.

பல வருடங்களாக தாமதிக்கப்பட்டுவரும் மாகாணசபை தேர்தல்களை தற்போதைக்கு நடத்தும் உத்தேசம் அரசாங்கத்துக்கு இல்லை என்ற பரவலான அபிப்பிராயத்தை சந்தேகத்துக்கு இடமின்றி உறுதி செய்யும் வகையில் பிரதமரின் பதில் அமைந்திருக்கிறது. அத்துடன் மாகாணசபை தேர்தல்கள் தொடர்பிலான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அவரைப் போன்று தெட்டத் தெளிவாக அரசாங்கத்தின் வேறு எந்த தலைவரும் இதுவரையில் சபையில் அறிவித்ததும் கிடையாது.

ஒன்பது மாகாண சபைகளினதும் பதவிக்காலங்கள் எப்போது முடிவடைந்தன என்பதை தெளிவாகக் குறிப்பிட்ட அவர், 2017 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட மாகாணசபைகள் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் தேர்தல்களை நடத்துவதாக இருந்தால் எல்லை நிர்ணயச் செயன்முறை நிறைவு செய்யப்பட வேண்டும் நிருவாக மாவட்டங்களுக்குள் தொகுதிகளை வரையறை செய்வதற்கு எல்லை நிர்ணயக் குழுவொன்றை ஜனாதிபதி நியமிக்க வேண்டும். அந்த குழு சமர்ப்பிக்கும் அறிக்கைக்கு பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கிய பின்னர் மாத்திரமே தேர்தல்களை நடத்த முடியும் என்று விளக்கமளித்தார்.

எல்லை நிர்ணயச் செயன்முறை பூர்த்தி செய்யப்படாதது மாத்திரமே தேர்தல்களை நடத்த முடியாமல் இருப்பதற்கான ஒரே காரணம் என்பதை பிரதமர் அறிவித்துவிட்ட நிலையில், எல்லை நிர்ணயக் குழு நியமிக்கப்பட்டு அதன் செயன்முறை நிறைவடையும் வரை மாகாணசபை தேர்தல்களுக்காக காத்திருக்க வேண்டும் என்பதே இன்றுள்ள நிலைவரம்.


தற்போது நடைமுறையில் இருக்கும் சட்டத்துக்கு மேலும் திருத்தங்களைக் கொண்டுவருவதன் மூலமாக விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் மாகாணசபை தேர்தல்களை நடத்தமுடியுமா இல்லையா என்பதை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு சமர்ப்பிக்கும் அறிக்கையில் இருக்கக்கூடிய விதப்புரைகளின் அடிப்படையிலேயே மாகாணசபை தேர்தல்களை நடத்துவது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் சபையில் பிரதமர் கூறினார்.

தற்போது நடைமுறையில் உள்ள விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்படப் போவதில்லை என்ற அறிவிப்புக்கும் பாராளுமன்ற தெரிவுக்குழுவின் விதப்புரைகளின் அடிப்படையில் தேர்தல்கள் குறித்து தீர்மானிக்கப்படும் என்ற அறிவிப்புக்கும் இடையில் ஒரு முரண்பாடு இருக்கிறது.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் தேர்தல்களை நடத்த வேண்டும் என்று அரசாங்க உறுப்பினர்களை பெரும்பான்மையாகக் கொண்ட தெரிவுக் குழு தீர்மானிக்கும் என்று எதிர்பார்க்க முடியுமா? அவ்வாறுதான் தீர்மானிப்பதாக இருந்தால் அதற்காக ஒரு தெரிவுக்குழு தேவையில்லையே.

மேலும், அந்த தெரிவுக் குழுவின் செயற்பாட்டுக் காலம் தற்போது நீடிக்கப்பட்டும் இருக்கிறது. மாகாண சபை தேர்தல்கள் அடுத்த வருடமாவது நடைபெறும் என்பது கூட சந்தேகமே. இவ்வாறாக மாகாணசபைகளுக்கு தேர்தல்களை நடத்தாமல் காலத்தை இழுத்தடித்துக் கொண்டு போய் இறுதியில், அதிகாரப் பரவலாக்கத்துக்கு எதிரான தங்களது கோட்பாட்டு ரீதியான நிலைப்பாட்டுக்கு ஜனதா விமுக்தி பெரமுன தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செயல்வடிவம் கொடுத்து மாகாணசபைகளை தேவையற்றவை என்று இல்லாமல் செய்துவிடக்கூடிய ஆபத்தையும் நிராகரிப்பதற்கில்லை.

## குற்றவாளிக் கூண்டில் ஜனாதிபதி



அமெரிக்கா தனது எல்லையை மீறிச் செல்லும் ஒரு தன்னிச்சையான நிறைவேற்று அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு, தீர்க்கமான முறையில் செயல்பட்டுள்ளது. ஈரானைத் தாக்குவதற்கு காங்கிரஸின் அனுமதியின்றி ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கு இருக்கும் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் தீர்மானம் ஒன்றை அந்நாட்டின் பிரதிநிதிகள் சபை (House of Representatives) நிறைவேற்றியுள்ளது.

இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மசோதா 215-க்கு 208 என்ற வாக்குகள் கணக்கில் வெற்றி பெறுவதை உறுதி செய்ய, நான்கு குடியரசுக் கட்சியினரும் ஜனநாயகக் கட்சியினருடன் கைகோர்த்தனர்.

இருப்பினும், வெள்ளை மாளிகை இதனை முறியடிப்பதில் உறுதியாக இருப்பதால், இந்த சட்டப்பூர்வமான நடவடிக்கையை நடைமுறைப்படுத்துவது பல தடைகளைத் தாண்ட வேண்டியிருக்கும்.

ஆனால், ட்ரம்பிற்கு காங்கிரஸ் விடுத்துள்ள செய்தி உரத்ததாகவும் தெளிவானதாகவும் இருக்கிறது. ட்ரம்பின் தலைக்கு மேல் தொங்கும் வாள் (எந்நேரமும் வரக்கூடிய ஆபத்து) போன்று இந்த போர் அதிகாரங்கள் தீர்மானம் அமையப் போவது நிச்சயம். நிறைவேற்று அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கான காங்கிஸின் இந்த நடவடிக்கை, அமெரிக்காவில் அதிகாரப் பகிர்வுக் கோட்பாட்டைப் பாதுகாப்பதற்கும், நிறுவனங்களின் வலிமைக்கும் சான்றாக அமைகிறது.

துரதிர்ஷ்டவசமாக, இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைக் கட்டுப்படுத்துவது என்பது நடைமுறையில் சாத்தியமற்ற ஒன்றாக உள்ளது, குறிப்பாக அவருடைய கட்சி பாராளுமன்றத்தில் கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும் போது இது இன்னும் கடினமாகிறது. எதிர்க்கட்சியின் பலவீனமான எண்ணிக்கையின் காரணமாக பாராளுமன்றம் ஜனாதிபதிக்கு அடிபணிந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், சிவில் சமூக அமைப்புகளும் தொழில்சார் சங்கங்களும் இணைந்து, நிறைவேற்று அதிகாரத்திற்கு எதிரான ஒரு மாற்று சக்தியாக நின்று ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

மேல் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை தன்னிச்சையாக அதிகரிக்கும் அரசாங்கத்தின் சந்தேகத்திற்குரிய முயற்சிக்கு முட்டுக்கட்டை போடும் வகையில், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் கொழும்பு மேல் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கம் ஆகியன தங்களது தற்போதைய முயற்சிகளை தீவிரப்படுத்தியுள்ளன. அரசாங்கத்தின் இந்த முன்மொழிவை எதிர்த்து அவை நியாயமான காரணங்களுடன் கூடிய அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

மேல்முறையீட்டு நீதிமன்றத்தினதும் உயர் நீதிமன்றத்தினதும் நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது அரசியலமைப்பின் படி முறையே 63 மற்றும் 65 என நிர்ணயிக்கப்பட்டுள்ளதைச் சுட்டிக் காட்டியுள்ள இவ்விரு சங்கங்களும், அரசாங்கத்தின் இந்த முன்மொழிவுக்கான அனைத்து வாதங்களையும் மிக அழுத்தமாக முறியடித்துள்ளதுடன், நிறைவேற்று அதிகாரம் நிதானத்துடன் செயல்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளன.

எதிர்க்கட்சியும் அரசாங்கத்தின் இந்த முயற்சிக்கு எதிராக வலுவான வாதங்களை முன்வைத்துள்ளது.

முன்னாள் நீதி, அரசியலமைப்பு விவகாரங்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், இந்த விவகாரத்தைக் கையில் எடுத்துப் பொதுமக்களை எச்சரித்ததுடன், சட்டத்தரணிகள் சங்கங்களை ஒன்றிணைத்து கடுமையான எதிர்ப்பைக் கிளப்பிய முதல் நபராக இருக்கலாம். இலங்கையில் தகுதியான நீதித்துறை அதிகாரிகளுக்கு எவ்வித பஞ்சமும் இல்லாத நிலையில், மேல்முறையீட்டு மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை நீட்டிப்பதற்கான இந்த முன்மொழிவு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

அரசாங்கம் உடனடியாகச் செய்ய வேண்டியது, தற்போதுள்ள நீதித்துறை காலிப் பணியிடங்களை நிரப்புவதுதான் என்று கொழும்பு மேல்நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. மேலும், முறையான காரணமின்றியும், அரசியலமைப்பு நடைமுறைகளைப் பின்பற்றாமலும் நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை மாற்றுவதற்கு நிறைவேற்று அதிகாரமோ அல்லது பாராளுமன்றமோ முயல்வது "மிக மோசமான அரசியலமைப்பு மீறல்" (constitutional impropriety) ஆகும் என்றும் அந்த சங்கம் எச்சரித்துள்ளது.

"உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை உயர்த்துவது, நீதித்துறைக்காகத் தங்கள் தொழில் வாழ்க்கையை அர்ப்பணித்த இலங்கை நீதித்துறை சேவை அதிகாரிகளுக்கு உடனடி, உறுதியான மற்றும் ஆழமான அநீதியான விளைவுகளை ஏற்படுத்தும்" என்றும் அது எச்சரித்துள்ளது.

வெளிப்படையான, அரசியலமைப்பு சார்ந்த மற்றும் பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்ட எந்தவொரு நியாயமான காரணமும் இன்றி இந்த வயதெல்லை நீடிப்பு முன்மொழியப்பட்டுள்ளதால், "அரசாங்கத்திற்குச் சாதகமாகச் செயல்படக்கூடிய குறிப்பிட்ட சில நீதிபதிகளின் சேவையைத் தொடர்ந்து பெற்றுக்கொள்வதற்காகவே நிறைவேற்று அதிகாரம் முயல்கிறது" என்ற பொதுவான எண்ணத்தை இது மக்கள் மத்தியில் ஏற்படுத்தக்கூடும் என்றும் அந்த சங்கம் வாதிடுகிறது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை, அதிகாரப் பகிர்வுக் கோட்பாட்டை சீர்குலைக்கும் ஒரு மறைமுகமான முயற்சியாகத் தெரிவது மிகவும் கவலையளிக்கிறது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்த ஜே.வி.பி/தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இத்தகைய சந்தேகத்திற்குரிய வழிகள் மூலம் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை அதிகரிக்க முயல்வது வெட்கக்கேடானதாகும்.

இது நீதித்துறையின் சுதந்திரம் மற்றும் அதிகாரப் பகிர்வு மீதான அவர்களின் அர்ப்பணிப்பைக் கேலிக்குரியதாக்கியுள்ளது.

இந்த விவகாரம் குறித்து எழுப்பப்படும் கேள்விகளுக்குப் பதிலளிக்காமல் அரசாங்கம் மௌனம் காக்கிறது. ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க இந்த விவகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமாயின், மேல்நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கம் கோரியுள்ளபடி பின்வருவனவற்றை உடனடியாகச் செய்ய வேண்டும்:

**(1) மேல்முறையீட்டு மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை அதிகரிக்கும் முன்மொழிவை உடனடியாகத் திரும்பப் பெற்று கைவிட வேண்டும்**

**(2) உயர் நீதிமன்றங்களில் தற்போதுள்ள காலிப் பணியிடங்களை அரசியலமைப்பு நடைமுறைகளின்படி, தாமதமின்றி உடனடியாக நிரப்ப சம்பந்தப்பட்ட அரசியலமைப்பு அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும்.**

**(3) இலங்கை அரசியலமைப்பினால் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள நீதித்துறையின் சுதந்திரத்திற்கும், உயர் நீதிமன்ற நீதிபதிகளின் பதவிக்காலம் மற்றும் சேவை நிபந்தனைகள் தொடர்பான அரசியலமைப்பு விதிகளுக்கும் அரசாங்கம் முழுமையாகக் கட்டுப்படும் என்பதை வார்த்தையாலும் செயலாலும் உறுதிப்படுத்த வேண்டும்.**

**(4) நீதித்துறையைப் பாதிக்கும் எதிர்கால விவாதங்களில், சட்ட வல்லுநர்கள், நீதித்துறை சேவை ஆணைக்குழு மற்றும் ஏனைய பங்குதாரர்களை வெளிப்படைத்தன்மை, அரசியலமைப்புவாதம் மற்றும் சட்டத்தின் ஆட்சி மீதான பரஸ்பர மரியாதையுடன் ஈடுபடுத்த வேண்டும்.**

உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை உயர்த்தும் எந்தவொரு திட்டத்தையும் கைவிட்டு, நீதித்துறையின் நேர்மை, சுதந்திரம் மற்றும் கண்ணியத்தைப் பாதுகாக்கவும், நீதித்துறை சேவை மீதான பொதுமக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தவும் உதவுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும அமைப்பும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சட்ட வல்லுநர்களின் இந்த உருக்கமான கோரிக்கைகளுக்கு இணங்கி, உடனடியாகத் தனது பாதையைச் சரி செய்து கொள்வதுதான், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைக்குள் இருக்கும் தன்னிச்சையான அதிகாரப் போக்கிற்குத் தானும் அடிமையாகிவிட்டதாக மக்கள் கருதுவதை முறியடிப்பதற்கு திசநாயக்கவுக்கு இருக்கக் கூடிய குறைந்தபட்ச வழியாகும்.

**(தி ஐலண்ட் ஆசிரிய தலையங்கம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜூன் - 12 வெள்ளிக்கிழமை
பராபவ வருடம் - வைகாசி 29
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : துவாதசி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மற்றவர்களை நம்பி காரியத்தை ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிப்பது நல்லது. உத்தியோகத்தில் குறைக் கூறுவார்கள். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் மனஸ்தாபம் வந்து நீங்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். உத்தியோகத்தில் விவா தம் வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மிதுனம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பிள்ளைகளின் பொறுப்புணர்வை பாராட்டுவீர்கள். கிடைக்கும். பிரபலங்கள் உதவுவார்கள். உத்தியோகத்தில் புது பொறுப்பை ஏற்பீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

**கடகம்**
சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வார்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். சாதிக்கும் நாள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். வியாபாரத்தில் போட்டிகள் இருக்கும். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**துலாம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவுக் கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் தைரியமாக முடிவுகள் எடுப்பார்கள். நன்மை நடக்கும் நாள்.

**விருட்சிகம்**
சமயோசிதமாக சாதுரியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர்கள் நண்பர்கள் உங்களிடம் முக்கிய விஷயங்களை பகிர்ந்து கொள்வார்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**தனுசு**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். கனவு நனவாகும் நாள்.

**மகரம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. தைரியம் கூடும் நாள்.

**மீனம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். மனசாட்சி படி செயல்படும் நாள்.

# நயினாதீவு அம்மன் திருவிழாக் காலங்களில் பயணிகள் சேவையில் ஈடுபடும் 42 படகுகள்

யாழ்ப்பானம், ஜூன். 12

நயினாதீவு அம்மன் ஆலய திருவிழா காலங்களில் சேவையில் ஈடுபட 42 படகுகள் உள்ளதாகவும், அவற்றினைத் தவிர வேறு படகுகள் பக்தர்களை ஏற்றத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் படகில் பயணிக்கும் அனைவரும் உயிர்காப்பு அங்கி அணிவது கட்டாயம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய திருவிழா எதிர்வரும் 15ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாள்கள் மகோற்சவ திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.

அது தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அக் கலந்துரையாடலில் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன அவையாவன,

01.பாதுகாப்பிற்கு தேவையான பொலிஸ் உத்தியோகத்தர்கள் - முதல் 10 நாள் வரை 25 பொலிஸ் உத்தியோகத்தர்களையும், இறுதி 5 நாள்களும் சப்பறம், தேர், தீர்த்தம் மற்றும் பூங்காவன உற்சவங்கள் வரை மேலும் 50 பொலிஸ் உத்தியோகத்தர்களையும் சேவையில் ஈடுபடுத்துவது எனவும், குறிகட்டுவானில் முதல் 10 நாள் வரை 5 பேரும் இறுதி 5 நாள்களில் மேலும்10 பேரும் சேவையில் ஈடுபடுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

02.திருவிழாவிற்காக 42 தனியார் படகுகள் தயார் நிலையில் உள்ளதாகவும், அதனை வணிக கப்பல்துறை செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர் தலைமையிலான குழு பரிசீலனை மேற்கொள்ளவதுடன் இந்த 42 படகுகளை தவிர வேறு படகுகளில் பக்தர்களை ஏற்ற முடியாது எனவும், அவ்வாறு வேறு படகுகளில் ஏற்றினால் பொலிஸாரின் நடவடிக்கை உட்படுத்தப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

03.படகோட்டிகள் மதுப்பாவனையில் இருந்தால் படகும் அதன் ஓட்டுநரும் மூன்று மாதங்களுக்கு அப் படகை ஓட்டுவதற்கு தடை விதித்தல் எனவும், இதற்கு படகு உரிமையாளர் சங்கம் பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

04.நயினாதீவு பிரதேசத்தில் ஒலிபெருக்கி மூலம் - படகுகளில் பயணிக்கும் போது உயிர்காப்பு அங்கி அணியாது பயணிப்பது தடை விதிக்கப்பட்டுள்ளது எனவும், மதுபோதையில் படகுகள் செலுத்துவது தண்டனைக்குரிய குற்றம் எனவும் மக்கள் சமூக பொறுப்புடன் செயல்படுமாறும் அறிவிக்குமாறு பிரதேச செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டது.

05.படகுகளில் பக்தர்கள் உயிர்காப்பு அங்கிகள் அணியாது பயணிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டதுடன், பயன்படுத்தப்படும் உயர்காப்பு அங்கிகள் பாவனைக்கு உகந்தவையா எனவும் வேலணை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸ், கடற்படை ஆகியோர் இணைந்து பரிசீலனை செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

06.சாரணர்களின் சேவைகளை பெற்றுக்கொள்வது மற்றும் இறுதி இரு திருவிழாவுக்கும் யாழ்ப்பாண மாவட்ட சாரணர்களின் சேவைகளை பெற்றுக்கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

07.குறிகட்டுவானிலிருந்து ஆலயம் செல்வதற்கான படகு போக்குவரத்து ஒரு வழிக் கட்டணம் 100.00 ரூபாய் எனவும் தீர்மானிக்கப்பட்டது. அத்தோடு கடற்போக்குவரத்து (படகு) நயினாதீவிலிருந்து காலை 6.00 மணிக்கும் குறிகட்டுவானிலிருந்து காலை 6.30 மணிக்கும் போக்குவரத்து சேவை நடைபெறவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது.

08.குறிகட்டுவான் துறைமுகத்தின் உள்நுழைவு வரை வாகனங்கள் தரித்து நிற்பதனை தடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

09.நயினாதீவுக்கு கட்டடப் பொருள்களை குறிப்பாக கல் மற்றும் மணல் என்பவற்றை எடுத்துச் செல்வது குறிகட்டுவானிலிருந்து பி. ப 4.00 மணிக்கு பின்னர் ஏற்றலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

10.யாசகம் பெறுவோர் மற்றும் சிறுவர்கள் வியாபாரத்தில் ஈடுபடுத்துவதை கண்காணிப்பதற்கு முதல் 10 திருவிழாக்களுக்கும் ஒரு நாளுக்கு மூன்று பேரும் இறுதி ஐந்து திருவிழாக்களுக்கும் ஆறு பேருமாக பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர், நன்னடத்தை உத்தியோகத்தர், உளவளத்துணை உத்தியோகத்தர், கலாசார உத்தியோகத்தர் உள்ளடங்கியவகையில் உத்தியோகத்தர்கள் கண்காணிப்பு கடமையில் ஈடுபடுத்தல் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

11.தனியார் மற்றும் அரச சேவை வீதிப்போக்குவரத்து சேவை கட்டணம் ரூபா 184.00 எனவும் தீர்மானிக்கப்பட்டது.

12.கோயில் கோபுரத்திற்கு முன்பக்கமாக தனியார் கடைகள், தாகசாந்தி நிலையம் அமைப்பதனை தவிர்க்குமாறு பிரதேச சபைக்கு அறிவுறுத்தப்பட்டது


மேலும், குடிதண்ணீர் தேவைப்பாடுகள், வைத்திய சேவை, சுகாதாரம், மின்சாரத் தேவை, அம்புலன்ஸ் சேவை, இலங்கை செஞ்சிலுவை மற்றும் சென் ஜோன்ஸ் படையினர் சேவை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் விரிவாக கலந்துரையாடப்பட்டன. (அ)

# "தூயஒளி" படகு படுகொலையின் 40 ஆவது ஆண்டு நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஜூன். 12

மண்டைதீவு கடற்பரப்பில் படுகொலை செய்யப்பட்ட 31, குருநகர் கடற்தொழிலாளர்களின் 40ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள், குருநகரில் அமைக்கப்பட்டுள்ள நினைவு தூபியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

குருநகர் ஆலய பங்குத்தந்தை திருப்பலி ஒப்புக்கொடுத்ததை அடுத்து, மெழுகுவர்த்தி, தீபம் ஏற்றி மலர் தூவி மக்கள் அஞ்சலி செலுத்தினர்.



கடந்த 1986ஆம் ஆண்டு ஜூன் 10ஆம் திகதி குருநகர் பகுதியில் இருந்து "தூயஒளி" படகில் கடலுக்குச் சென்ற 31 கடற்தொழிலாளர்கள் மண்டைதீவுக் கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

படுகொலையானவர்களின் நினைவாக குருநகரில் அமைக்கப்பட்டுள்ள நினைவு தூபியிலையே அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. (அ)

# சந்நிதியில் வாராந்த ஆன்மீக நிகழ்வு

வடமராட்சி, ஜூன். 12

தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் வாரந்தோறும் நடத்தி வரும் வாரந்த ஆன்மீக நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு செல்வி ரேவதி முகுந்தனின் தெய்வீக இசைப் பாடல்கள் இசைக்கலைமணி நடேசு செல்வச்சந்திரனின் பின்னணி இசையுடன் நடைபெற உள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கல்வியை நிறுத்திய 26, 138 பிள்ளைகள்!

## சபையில் தகவல் வெளியிட்டார் பிரதமர்

கொழும்பு, ஜூன். 12

2018ஆம் ஆண்டு முதல் 2024ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் 267,138 பிள்ளைகள் பாடசாலை கல்வியை இடைநிறுத்தியுள்ளதாகப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த பிரதமர், 2010 முதல் 2017ஆம் ஆண்டின் முற்பகுதி வரை பாடசாலைக் கல்வியை இடைநிறுத்திய பிள்ளைகள் குறித்த துல்லியமான தரவுகள் தன்னிடம் இல்லை எனக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2018-2024 வரையான வருடாந்த பாடசாலை கணக்கெடுப்பு தரவுகளின் அடிப்படையில், முதலாம் தரம் முதல் 10ஆம் தரம் வரை ஒவ்வொரு வகுப்பிலும் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்கள் விலகிய விகிதங்களை கருத்தில்



கொண்டு, சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட சமன்பாட்டைப் பயன்படுத்தி இந்தத் தரவுகள் கணக்கிடப்பட்டுள்ளன.

அதற்கமைய, பாடசாலை கல்வியை இடைநிறுத்திய பிள்ளைகளின் எண்ணிக்கை
2018இல் 38,839 ஆகவும்,
2019இல் 41,503 ஆகவும்,
2020இல் 32,540 ஆகவும்,
2021இல் 25,492 ஆகவும்,
2022இல் 52,596 ஆகவும்,
2023இல் 50,345 ஆகவும்,
2024இல் 25,823 ஆகவும்
பதிவாகியுள்ளது.

இருப்பினும், ஒரு மாகாணத்திலிருந்து மற்றொரு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளுக்கு மாறுதல், சர்வதேச பாடசாலைகளில் சேருதல் அல்லது குடும்ப உறுப்பினர்களுடன் வெளிநாடுகளுக்குச் செல்லுதல் போன்ற காரணங்களால் சில மாணவர்கள் பாடசாலை அமைப்பிலிருந்து விலகினாலும், அவர்கள் தொடர்ந்து முறையான கல்வியைப் பெற்றுக் கொண்டிருக்கலாம்.

இவ்வாறான தரவுகளை இந்தக் கணிப்பீட்டில் துல்லியமாக அடையாளம் காண முடியாது. பிள்ளைகள் பாடசாலை கல்வியை இடைநிறுத்துவதற்குத் தனிப்பட்ட காரணங்கள், பாடசாலை சார்ந்த காரணங்கள், குடும்பம் சார்ந்த காரணங்கள், சமூகக் காரணங்கள் மற்றும் பிற கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுதல் போன்றவை முக்கிய காரணங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன-என்றார். (அ)

# மக்களுக்கு வரிச்சுமை; புகையிலை நிறுவனங்களுக்கு வரிச்சலுகைகள்!

## அரசாங்கம் மீது சஜித் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன். 12

பொது மக்கள் மீதான வரிச்சுமையை அதிகரித்துள்ள அரசாங்கம், புகையிலை நிறுவனங்களுக்கு வரிச்சலுகைகளை வழங்கியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் குற்றம் சாட்டியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற பொருளாதார நிலைமை குறித்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

அரசாங்கத்தின் வருமான வளர்ச்சி என்பது, தனிநபர்கள் மற்றும் வணிகங்கள் மீது விதிக்கப்பட்ட வரிகள் மூலம் மட்டுமே கிடைத்துள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக் காட்டினார்.

குறிப்பாக, பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் ஏனைய தீர்வைகள் அதிகரிக்கப்பட்டதன் மூலமே இந்த வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

உலக சுகாதார நிறுவனம் புகையிலை மீதான வரிகளை உயர்ந்த மட்டத்தில் பேணுமாறு பரிந்துரைத்துள்ள போதிலும், உள்நாட்டில் அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகள் அதிகரிக்கப்பட்டு, சிகரெட் மீதான வரிகள் குறைக்கப்பட்டுள்ளதாக அவர் உரிமை கோரினார்.

சிகரெட் வரிகளைக் குறைத்ததன் காரணமாக, அரசாங்கத்திற்கு கிடைக்கவிருந்த சுமார் 17.3 பில்லியன் ரூபாய் வருமானம் இழக்கப்பட்டுள்ளதாக சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்தார்.

எனவே, அரசாங்கம் இந்த வரிவழங்கல் கொள்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் எனவும், இதன் மூலம் கிடைக்கப் பெறும் கூடுதல் வருமானத்தைப் பயன்படுத்தி பொது மக்களுக்கு நிவாரணங்களை வழங்கி, அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (அ)

# சுரேஷ் சாலேயின் நிலையை பரிசோதிக்க மருத்துவக் குழு!

கொழும்பு, ஜூன். 12

தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் தலைவர் சுரேஷ் சாலே, காவலில் இருந்தபோது சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளாரா எனப் பரிசோதித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஐந்து பேர் கொண்ட விசேட மனநல தடயவியல் மருத்துவ குழுமமொன்றை கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் நியமித்துள்ளது.

கொழும்பு கோட்டை நீதிவான் பசன் அமரசேனவினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த மருத்துவ பரிசோதனையை தெற்கு கொழும்பு போதனா வைத்திய சாலையில் மேற்கொள்ளுமாறும் அங்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, அந்த மருத்துவ அறிக்கையை அடுத்த வழக்குத் தவணையின் போது நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் நீதிவானின் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# பாரியளவு போதைப்பொருளுடன் கொழும்பில் ஒருவர் சிக்கினார்!

கொழும்பு, ஜூன். 12

கொழும்பு மாவட்டம் பொரலஸ்கமுவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வேரஹெர பகுதியில், ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருள்களுடன் சந்தேகநபர் ஒருவரை மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே இந்த போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இதன்படி, 1 கிலோ கிராம் 80 கிராம் ஹெரோயின் மற்றும் 5 கிலோ கிராம் 24 கிராம் ஐஸ் போதைப்பொருள்களுடன் வேரஹெர பகுதியைச் சேர்ந்த 42 வயதான நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர், வெளிநாடுகளில் உள்ள போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் தொடர்பு கொண்டு உள்நாட்டில் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ளதாக தெரியவந்துள்ளதுடன், மேல் மாகாண வடக்கு குற்றத் தடுப்பு பிரிவினர் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# குவைத்தில் போதைப்பொருள் கடத்திய 3 இலங்கையர் கைது!

கொழும்பு, ஜூன். 12

குவைத்தில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட மூன்று இலங்கையர்கள் உட்பட ஏழு பேரை அந்நாட்டு பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து ஹஷிஷ், ஹெரோயின், போதை மாத்திரைகள் உள்ளிட்ட பல்வேறு வகையான போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், போதைப்பொருள்களை அளவிடும் கருவிகள் மற்றும் பொதி செய்யும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களும் கைப்பற்றப்பட்ட உபகரணங்களும் மேலதிக விசாரணைகளுக்காக குவைத் நாட்டின் குற்றவியல் பாதுகாப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உலக அமைதிச் சுட்டெண் 2026; இலங்கை பெரிய முன்னேற்றம்

கொழும்பு, ஜூன். 12
பொருளாதாரம் மற்றும் அமைதிக்கான சர்வதேச நிறுவனம் அதன் 20ஆவது வருடாந்த "உலக அமைதிச் சுட்டெண்" 2026 அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இதில் தெற்காசிய பிராந்தியத்தில் அமைதித் தன்மையில் மிகப்பெரிய சதவீத முன்னேற்றத்தை இலங்கை பதிவு செய்துள்ளது.

இதன்படி, கடந்த 2025ஆம் ஆண்டுக்கான உலக அமைதிச் சுட்டெண்ணில் 163 நாடுகளுக்கு மத்தியில் 97ஆவது இடத்தில் இருந்த இலங்கை, இம்முறை 30 இடங்கள் முன்னேறி உலகளவில் 67ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

இதன் மூலம், தெற்காசிய பிராந்தியத்தில் பூட்டானுக்கு அடுத்தபடியாக இரண்டாவது அதி அமைதியான நாடாக இலங்கை தரப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் ஒட்டுமொத்த அமைதி நிலைமை 2.3 வீதம் முன்னேற்றமடைந்துள்ளது.


இந்த நேர்மறையான வளர்ச்சிக்கு முக்கிய காரணங்களாக இராணுவமயமாக்கல் தணிப்பு துறையில் 6.4 வீத குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

ஐநாவின் அமைதிப்படைக்கான நிதியுதவி குறிகாட்டியில் 40.8 வீத பாரிய வளர்ச்சி பதிவாகியுள்ளது.

அரசியல் ஸ்திரமின்மை 25 வீதம் குறைந்ததன் பின்னணியில், இந்தத் துறையில் 1.8 வீத முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் இந்த நேர்மறையான நகர்வுக்கு நேர்மாறாக, உலகளாவிய அமைதி நிலைமையானது சராசரியாக 0.7 வீதம் சரிவைச் சந்தித்துள்ளது.

உலகளவில் அமைதித் தன்மை தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வரும் 12ஆவது தொடர்ச்சியான ஆண்டு இதுவாகும். (அ)



## கதிர்காமம் பாதயாத்திரீகர்களுக்கு கோபாலபுரத்தில் அமோக வரவேற்பு

அம்பாறை, ஜூன். 12
யாழ்- கதிர்காமம் பாத யாத்திரீகர்களுக்கு இருபத்தோராவது நாளான நேற்று வியாழக்கிழமை நிலாவெளி கோபாலபுரத்தில் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

இன்று வெள்ளிக்கிழமை வரலாற்று பிரசித்தி பெற்ற திருகோணேஸ்வரர் ஆலயத்தைச் சென்றடைவர்.

அங்கு, கொழும்பில் இருந்து 10 சிங்கள பக்தர்களும் இந்திய தூதரகத்தின் 10 இந்தியர்களும் யாத்திரையில் இணையவிருப்பதாக யாத்திரைக்குழுத் தலைவர் ஜெயா வேல்சாமி கோபாலபுரத்தில் இருந்து தெரிவித்தார்.

## வயிற்றுக்குள் போதைப்பொருள் வெடித்து பஸ் சாரதி உயிரிழப்பு!

கொழும்பு, ஜூன். 12
வயிற்றுக்குள் மறைத்து வைத்து "ஐஸ்" போதைப்பொருளைக் கடத்திச் சென்ற சொகுசு பஸ் சாரதி ஒருவர், அந்த போதைப்பொருள் பைக்கெற் வயிற்றினுள்ளேயே வெடித்து விஷமாகியதால் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர், தெற்கு அதிவேக வீதியின் தங்காலை - மாகும்புர வீதியில் பயணிக்கும் சொகுசு பேருந்து ஒன்றில் பணியாற்றிய, ஒகவெல பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய சாரதியாவார்.

கடந்த 8ஆம் திகதி மாகும்புரவிலிருந்து தங்காலை நோக்கிச் சென்ற பஸ், அதன் இலக்கை அடைந்த சில நிமிடங்களிலேயே இந்தச் சாரதி திடீரென கடுமையாக நோய்வாய்ப்பட்டுள்ளார்.

உடனடியாகச் செயற்பட்டு அவர் சிகிச்சைக்காக தங்காலை ஆரம்ப வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதிலும், அங்கு அவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் தங்காலை வைத்தியசாலையில் நடத்தப்பட்ட பிரேத பரிசோதனையில், உயிரிழந்த நபரின் வயிற்றுக்குள் இருந்து போதைப்பொருள் அடங்கிய இரண்டு பைக்கெற்றுகள் மீட்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

வயிற்றிலிருந்த அந்த இரண்டு போதைப்பொருள் பைக்கெற்றுக்களில் ஒன்று உடைந்ததால், அந்தப் போதைப்பொருள் உடலின் உட்பகுதியில் இரத்தத்துடன் கலந்து ஏற்பட்ட விஷமே இந்த மரணத்திற்குக் காரணம் என மருத்துவப் பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளது. (அ)

"டித்வா" சூறாவளிப் பேரழிவு:

## தொடர்ந்தும் தற்காலிக முகாம்களில் முடங்கியுள்ளனர் 4 மாவட்ட மக்கள்!

கொழும்பு, ஜூன். 12
"டித்வா" சூறாவளி தாக்கம் இடம்பெற்று ஐந்து மாதங்களுக்கும் மேல் கடந்துள்ள நிலையிலும், பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கை இன்னும் கேள்விக்குறியாகவே உள்ளது.

தங்களின் இருப்பிடங்களை இழந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள், இன்றும் தற்காலிக நிவாரண முகாம்களிலேயே தஞ்சம் புகுந்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட 4 மாவட்டங்களில் உள்ள தற்காலிக முகாம்களில் தற்போதும் தங்கியுள்ள மக்களின் முழுமையான விபரங்களை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ளது.

கேகாலை, நுவரெலியா மற்றும் கொழும்பு ஆகிய 4 மாவட்டங்களைச் சேர்ந்த 465 குடும்பங்களைச் சேர்ந்த 1,337 பேர் இன்னமும் பாதுகாப்பான மத்திய நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கேகாலை மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 02 மத்திய நிலையங்களில் 43 குடும்பங்களைச் சேர்ந்த 133 பேர் தஞ்சம் புகுந்துள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் 01 மத்திய நிலையத்தில் 35 குடும்பங்களைச் சேர்ந்த 140 பேர் தற்போதும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தலைநகர் கொழும்பில் 02 மத்திய நிலையங்களில் 18 குடும்பங்களைச் சேர்ந்த 61 பேர் இன்னமும் தற்காலிகமாக வாழ்ந்து வருவதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த அனர்த்தத்தினால் பதுளை மாவட்டமே மிக மோசமான பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. அங்குள்ள 13 மத்திய நிலையங்களில் மட்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் (1003 பேர்) தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் "சக்திராகம்" இறுவட்டு வெளியீடு



காரைதீவு, ஜூன். 12
காரைதீவு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் மற்றும் தீமிதிப்பு சடங்கு நேற்று முன் தினம் புதன்கிழமை நடைபெற்றபோது "சக்திராகம்" எனும் 33 பக்திப் பாடல்களை கொண்ட இறுவட்டு பக்தி பூர்வமாக வெளியிடப்பட்டது.

இவ் இறுவட்டு வெளியீட்டு விழா ஆலய பரிபாலன சபையின் உப தலைவர் கே.தங்கவடிவேல் முன்னிலையில், விபுல மாமணி வி.ரி.சகாதேவராஜா தலைமையில் நடைபெற்றது.

பாடலுக்கு நவீன தொழிநுட்பத்தில் இசையமைப்பை விபுலமணி இ.கோபாலசிங்கம் வழங்கியுள்ளதுடன், நெறியாளராக வித்தகர் விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா செயற்பட்டார்.

இந்நிகழ்வில் பாடல்கள் 1 மற்றும் பாடல்கள் 2 தொகுதிகள் முன்னர் வெளியிடப்பட்டதுடன், 3ஆம் தொகுதி பாடல்களின் பாடலாசிரியராக ஆலய தலைவர் கலாபூஷணம் விபுல மணி எஸ். இராமநாதன் பணியாற்றியுள்ளார்.

இவ்விழாவில் ஆலய நிர்வாகத்தினர், பக்தர்கள் மற்றும் இசை ஆர்வலர்கள் பலரும் கலந்து கொண்டு, இறுவட்டு வெளியீட்டை சிறப்பித்தனர். (அ)

## ஜூன் 15 முதல் டெங்கு ஒழிப்பு வாரம்

கொழும்பு, ஜூன். 12
டெங்கு நோய் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் டெங்கு ஒழிப்பு வாரத்தைப் பிரகடனப்படுத்துவதற்கு தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

நாடு முழுவதும் டெங்கு நோய் பரவல் அதிகரித்து வருவதன் காரணமாகவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் சமூக வைத்திய நிபுணர் பிரஷிலா சமரவீர தெரிவித்துள்ளார்.

டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களைக் கட்டுப்படுத்துவதற்காக, கடந்த 8, 9 மற்றும் 10 ஆகிய திகதிகளிலும் நாடு தழுவிய ரீதியில் விசேட நுளம்பு ஒழிப்புத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டதாகவும்,

டெங்கு நோய் பரவலை மேலும் கட்டுப்படுத்துவதற்காக, உள்ளூராட்சி மன்ற மட்டத்தில் நுளம்பு ஒழிப்பு வாரம் ஒன்றைச் செயல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் சமூக வைத்தியர் நிபுணர் பிரஷிலா சமரவீர குறிப்பிட்டுள்ளார். (அ)

## பாடசாலை அதிபர்களுக்கு கௌரவிப்பு



கல்முனை, ஜூன். 12
2025 ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், கிழக்கு மாகாணத்தில் கல்முனை கல்வி வலயம் முன்னேற்றகரமான நிலையை அடைவதற்கு பங்களித்த பாடசாலை அதிபர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

கல்முனை பற்றிமா தேசிய பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வில், கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹூதுல் நஜீம் தலைமையில் அதிபர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

கல்வித் தரத்தை மேம்படுத்துவதிலும், மாணவர்களின் கல்வி அடைவுகளை உயர்த்துவதிலும் சிறப்பான பங்களிப்பை வழங்கிய பாடசாலைகளின் அதிபர்களின் அர்ப்பணிப்பு மற்றும் சேவையைப் பாராட்டும் வகையில் இக்கௌரவிப்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நிகழ்வில் பிரதிக்கல்வி பணிப்பாளர்களான எம்.எச்.எம். ஜாபீர், எம்.எச். றியாசா, கல்வி அதிகாரிகள், பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் கல்வித் துறையுடன் தொடர்புடைய பலர் கலந்து கொண்டனர். (அ)

## சஷி வீரவன்ஸ தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு தள்ளுபடி

கொழும்பு, ஜூன். 12
முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவின் மனைவி சஷி வீரவன்ஸ, போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து இராஜதந்திர கடவுச்சீட்டைப் பெற்ற வழக்கில் அவருக்கு விதிக்கப்பட்ட இரண்டு வருட சிறைத் தண்டனை மற்றும் அபராதத்துக்கு எதிராகத் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை கொழும்பு மேல் நீதிமன்றம் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்துள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன இந்த தீர்ப்பை வழங்கினார். இதன்படி, சஷி வீரவன்ஸவுக்கு எதிராக கொழும்பு நீதவான் நீதிமன்றத்தால் முன்னதாக வழங்கப்பட்ட தீர்ப்பும், தண்டனையும் மேல் நீதிமன்றத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## ஈஸ்டர் தாக்குதல்...

முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

விசாரணைகளில் தலையிடாதே, கட்டுவப்பிட்டிய தேவாலயத்தை காட்டிக் கொடுத்தது யார்?, குற்றம் செய்யாவிட்டால் பயம் ஏன்? போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தி அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டிய தேவாலயத்தில் இடம்பெற்றபோது அங்கு கொல்லப்பவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் சிலரும் பிரதேசவாசிகள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

விசாரணைகள் இடையூறின்றி நடத்தப்படவேண்டும், அரசியல் தலையீடுகள் கூடாது, விசாரணைகளுக்கு இடையூறு செய்பவர்கள் கைது செய்யப்பட வேண்டும், அச்சுறுத்தலுக்கு அடிபணியக் கூடாது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் முன்வைத்தனர். (அ)

## யாழ். கலாசார...

நிறைவேற்றப்பட்டது.

குறித்த தீர்மானத்தில்,

2014 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஒன்பதாம் திகதி கைச்சாத்திடப்பட்ட இரு தரப்பு உடன்படிக்கைக்கு அமைவாக, பூர்த்தி செய்யப்பட்ட இந்த கட்டடத்தை யாழ்ப்பாணம் மாநகர சபையிடம் விரைவாக கையளிக்க வேண்டும் எனவும், இதன் பொருட்டு எந்தவித நம்பிக்கை பொறுப்பு கட்டமைப்பு உருவாக்கப்படுவதற்கு இந்த சபை உடன்படவில்லை எனவும்,

இலங்கைக்கான இந்திய தூதுவரையும், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அமைச்சரையும் கோருவது எனவும் யாழ்ப்பாணம் மாநகர சபை தீர்மானித்துள்ளது.

(அ)

## சங்கிலியன் பூங்காவில்...

நடைபெறுவதால், அங்கு சீனாவுக்கு இடம் கிடைக்கவில்லை. இதனால் யாழில் ஏதாவது ஓரிடத்தில் தானும் புத்தகக் கண்காட்சியை நடத்த நினைக்கும் சீனா, சங்கிலியன் பூங்காவில் மாநகர சபையால் ஏலத்தில் விடப்படும் ஓர் இடத்தைப் பெற்று புத்தகக் கண்காட்சியை நடத்த முயற்சிக்கின்றது என்ற சாரப்படக் கூறினார்.

இந்த நிலையில், ஆணையாளர் தன்னிச்சையாக முடிவுகளை எடுக்க நினைப்பதாகவும், கூட்டங்களிலும் சபையின் நடவடிக்கைகளிலும் முதல்வருக்கே அதிகாரம் உள்ளது எனவும், இது புதிதாக வந்துள்ள ஆணையாளருக்கு சில வேளைகளில் தெரியாதிருக்கலாம் எனவும், முதல்வர் மதிவதனி சபையில் அறிவித்தார்.

எனவே இந்த விதிமுறைக்கு அமைய அவரைச் செயற்படுமாறு அறிவுறுத்துமாறு, முதல்வரால் செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டதுடன்,

குறித்த புத்தகக் கண்காட்சிக்கான அனுமதி முழுமையாக ஆராய்ந்த பின்னரே வழங்கப்படும் எனவும், அதுவரை எந்த நடவடிக்கைக்கும் அனுமதி வழங்கப்படாது எனவும் தீர்மானிக்கப்படுவதாக முதல்வர் மதிவதனி அறிவித்தார்.

(அ)

## 2.5 மில்லியன்...

உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள காணொளி ஒன்றிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

மத்திய வங்கி, திறைசேரி, முதன்மைச் செயலாளர் மற்றும் ஆளுநர் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளும் எமது குழுவில் முன்னிலையாகி அறிக்கை சமர்ப்பித்திருந்தனர்.

அந்த அறிக்கை தொடர்பில் நாம் கலந்துரையாடிய போது, பல சிக்கல்களும் குறைபாடுகளும் வெளிச்சத் திற்கு வந்தன.

இந்த நிலைமைக்கு யார் பொறுப்புக்கூறவேண்டும் என்பது குறித்து இரு வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. மத்திய வங்கி இதற்குப் பெரும் பொறுப்பேற்க வேண்டும் என்ற கருத்து அறிக்கையில் காணப்பட்ட போதிலும், மத்திய வங்கி அது குறித்து வேறு பட்ட ஒரு நிலைப்பாட்டையே எமக்குத் தெரிவித்தது.

அத்துடன், அவர்களுக்கு இந்த அறிக்கை கிடைக்கப் பெற்றிருக்காததால், அதனை நாம் இன்று அவர்களிடம் கையளித்தோம். இது குறித்த தங்களது பதில் அறிக்கையை ஒரு வாரத்திற்குள் சமர்ப்பிப்பதாக அவர்கள் உறுதியளித்துள்ளனர்.

இருப்பினும், இந்த ஒட்டுமொத்த செயற்பாடுகளும் மின்னஞ்சல் ஊடாகவே பரிமாறப்பட்டுள்ளன.

கடந்த ஐந்து வருடங்களாக எவ்வித தொழில்நுட்ப ஆதரவும் இல்லாத, காலாவதியான மின்னஞ்சல் சேவையகம் ஒன்றையே இவர்கள் இதற்காகப் பயன்படுத்தியுள்ளனர் என்பது இங்கு தெளிவாகிறது.

சைபர் பாதுகாப்பு இவ்வளவு முக்கியத்துவம் பெற்றுள்ள இந்த காலகட்டத்தில், அரசாங்கத்தின் முதன்மையான நிறுவனம் ஒன்று எவ்வாறு எவ்வித பாதுகாப்பும் இல்லாத ஒரு மின்னஞ்சல் சேவையகத்தைப் பயன்படுத்தியது என்பது பெரியதொரு கேள்வியாக எழுந்துள்ளது.

இதுவொரு மிகப்பெரிய திருட்டுச் சம்பவம் என்பதை எனது ஆரம்ப அறிக்கையிலேயே நான் குறிப்பிட்டிருந்தேன். இங்கு திருட்டு எதுவும் நடக்கவில்லை என எவரும் வாதிடவில்லை, திருட்டு நடந்துள்ளது என்பது உறுதியானது. ஆனால், இறுதியில் இந்த நிதியை யார் செலுத்தப் போகிறார்கள் என்பதே தற்போதைய கேள்வியாகும்.

இது குறித்து நான் செயலாளரிடம் கேட்டபோது, இந்த பணத்தை மீளப் பெற முடிந்தால் செலுத்த முடியும் என்றும், இல்லையெனில் எஞ்சிய பகுதியை பொதுமக்களே ஏற்க வேண்டும் என்றும் கூறினார். ஆனால், இந்தப் பணத்தை இனி எவ்விதத்திலும் மீளப் பெற்றுக்கொள்ளக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, ஒரு புதிய பாதீட்டு திட்டத்தின் ஊடாக இந்த 2.5 மில்லியன் டொலர் நிதியை பொதுமக்களின் வரிப்பணத்தில் இருந்தே செலுத்த வேண்டிய நிலை ஏற்படும்-என்றார்.

(அ)

## சர்வதேச...

எதிரான பிரகடனத்தில் இலங்கை கையெழுத்திட்டுள்ளது.

எனினும், தற்போது சுரேஷ் சாலே நீதிமன்ற உத்தரவின்றி, வெறும் தடுப்புக் காவல் உத்தரவின் அடிப்படையில் மாத்திரம் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தடுப்புக் காவலில் சாலேயுக்கு கடுமையான சித்திரவதைகள் மற்றும் மனிதாபிமானமற்ற முறையிலான நடத்தைகள் பிரயோகிக்கப்பட்டுள்ளதாகவும், இதன் காரணமாக அவர் மனரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளார்.

நாட்டின் ஜனாதிபதி என்ற ரீதியில் அநுரகுமார திஸாநாயக்க இது குறித்து மௌனம் காப்பது, அவர் சர்வதேச உடன்படிக்கைகளை மீறுவதாகவே அமையும்.

இந்தக் கொடூரமான சித்திரவதைகளுக்கு எதிராக எதிர்காலத்தில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது, ஜனாதிபதி முதல் குற்றப்புலனாய்வுத் திணைக் களத்தின் கீழ்நிலை அதிகாரிகள் வரை அனைவரும் சட்டத்தின் முன் பதிலளிக்கவேண்டியிருக்கும்.

மேலிடத்திலிருந்து வரும் உத்தரவுகளைக் கண்மூடித்தனமாக நிறைவேற்ற வேண்டாம். அவ்வாறு செய்பவர்கள், ஒரு நாள் பாதிக்கப்பட்ட சாலேயை விடவும் மோசமான நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.

சாலேயை தடுத்து வைத்துள்ள பிரிவில் உள்ள அனைத்து அதிகாரிகளும் இந்தச் சித்திரவதைச் சம்பவங்களுக்கு ஒரு நாள் பதில் சொல்லியே ஆக வேண்டும்-என்றார்.

(அ)

## காணிகளை விடுவிக்குமாறு...

எதிர்வரும் 15 ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் முன்பாகப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

இந்தப் போராட்டத்திற்கு, அனைத்து மக்களும் பலம் சேர்க்க வேண்டும் என மயிலிட்டி மீள்குடியேற்ற அபிவிருத்திக் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

(அ)

## சங்கீத்சனின் பிணை...

சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கணேஷன் சங்கீத்சனுக்கு பிணை வழங்குமாறு கோரியே குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ள கட்டளைகள் தொடர்பிலும், சங்கீத்சன் சார்பில் மறுசீராய்வு மனுவை தாக்கல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மனு, இன்று அல்லது எதிர்வரும் 15 அல்லது 16 ஆம் திகதி எடுத்துக் கொள்ளப்படும் எனவும் சங்கீத்சனின் சட்டத்தரணி சயந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பை மீளுருவாக்கம் செய்ய முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டில், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட கணேஷன் சங்கீத்சன் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

(அ)

## சாலேயின் மனு...

தடுப்புக்காவல் உத்தரவை செல்லுபடியற்றதாக்குமாறு கோரி, அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் சுரேஷ் சாலே தாக்கல் செய்த ரிட் மனு மீதான மேலதிக சமர்ப்பணங்களை பரிசீலிப்பதை மேன்முறையீட்டு நீதிமன்றம் ஜூலை 10ஆம் திகதி வரை ஒத்திவைத்துள்ளது.

நீதிபதிகளான ரோஹந்த அபேசூரிய மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில் இந்த மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சாலே சார்பாக முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன, ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பின் செயற்பாடுகள் இலங்கைக்குள் எவ்வாறு முன்னெடுக்கப்பட்டது என்பதை விவரித்து நீதிமன்றத்தில் சமர்ப்பணங்களை முன்வைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சமர்ப்பணங்களைக் கேட்டறிந்த நீதிமன்றம், மேலதிக வாதங்களுக்காக இந்த வழக்கினை மீண்டும் ஜூலை 10ஆம் திகதி அழைக்குமாறு உத்தரவிட்டது.

(அ)

## பஸில் ராஜபக்ஷவுக்கு...

அதற்கான அவசியம் இல்லை என நீதவான் சுட்டிக் காட்டினார்.

அதற்கு பதிலாக, தேவையெனில் சர்வதேச பிடியாணை பெறுவதற்கான சத்தியக்கடதாசியை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அடுத்த கட்ட சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அவர் அறிவுறுத்தினார்.

இதனிடையே, வழக்கில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் முன்னாள் முகாமைத்துவ பணிப்பாளர் ரூமி ஜவ்பர் எதிர் வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்படுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், இரண்டாவது சந்தேக நபரான முன்னாள் தலைவர் பாஸ்வர் குணவர்தன, தலா 10 மில்லியன் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்கப்படுவதற்கும் நீதவான் அனுமதி வழங்கியுள்ளார்.

(அ)

## சாலேயை தினமும்...

பணிப்பாளருக்கு 2 கடிதங்களை அனுப்பி அவர்கள் இக்கோரிக்கையை விடுத்துள்ளனர். உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்காக தடுப்புக் காவல் உத்தரவின் பேரில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொறுப்பில் உள்ள அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளரான ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே, உடல்நலக்குறைவு காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

இவ்வாறானதொரு பின்னணியில், இது தொடர்பான வழக்கு நேற்று முன் தினம் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சுரேஷ் சாலே சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், அவரது தற்போதைய நிலையைக் கருத்திற்கொண்டு, தினமும் நோயாளர்களைப் பார்வையிடும் நேரத்தில் அவரது மனைவியும் மகனும் அவரைப் பார்வையிட அனுமதித்து உத்தரவிடுமாறு நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தனர்.

இருப்பினும், அந்த கோரிக்கையை நிராகரித்த கோட்டை நீதவான் பசன் அமரசேன, சந்தேக நபர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் விதிகளின் கீழ் தடுப்புக் காவலில் சிகிச்சை பெற்று வருவதால், இவ்வாறானதொரு உத்தரவைப் பிறப்பிக்க தமக்கு அதிகாரம் இல்லை எனக் குறிப்பிட்டார்.

இப்பின்னணியில், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொறுப்பில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் தனது கணவரை தினமும் பார்வையிட அனுமதிக்குமாறு கோரி சுரேஷ் சாலேயின் மனைவி, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஷானி அபேசேகரவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். இதேவேளை, சுரேஷ் சாலேயின் சட்டத்தரணி அசித் சிறிவர்தனவும் தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் தனது கட்சிக்காரரை தினமும் பார்வையிட அனுமதி கோரி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தனது கட்சிக்காரரின் நிலையைத் தொடர்ந்து கண்காணித்து, அது குறித்து நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கவும், அவரது உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாக்கவும் தமக்கு தொழில்முறைப் பொறுப்பு இருப்பதாக அவர் அக்கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார். மேலும், தனது கட்சிக்காரருடன் தொடர்ந்து கலந்துரையாடுவது அவசியம் எனச் சுட்டிக் காட்டியுள்ள சட்டத்தரணி, தனது கட்சிக்காரரை தினமும் சந்திப்பதற்கான வாய்ப்பை வழங்குமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளரிடம் கோரியுள்ளார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# பயங்கரவாதச் சட்டத்தை முற்றாக நீக்கக் கோரி தனிநபர் பிரேரணை!

### பாராளுமன்றில் சமர்ப்பித்தார் சாணக்கியன் எம்.பி.

கொழும்பு, ஜூன். 12

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக இரத்து செய்யக் கோரி, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் பாராளுமன்றத்தில் தனிநபர் பிரேரணை ஒன்றை சமர்ப்பித்துள்ளார்.

இந்தப் பிரேரணை பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் பட்டியலிடப்பட்டுள்ள போதிலும், இதுவரை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவோ அல்லது வர்த்தமானியில் வெளியிடப்படவோ இல்லை.

1979 ஆம் ஆண்டில் தற்காலிக ஏற்பாடாகக் கொண்டுவரப்பட்டு பின்னர் நிரந்தரமாக்கப்பட்ட இந்த சட்டம், குறிப்பாக தமிழ் - முஸ்லிம் சமூகங்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டு, பல தசாப்தங்களாக மனித உரிமை மீறல்களுக்கும் தன்னிச்சையான கைதுகளுக்கும் வழிவகுத்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த சட்டத்தை வெறும் திருத்தங்களுக்கு உட்படுத்துவதோ அல்லது புதிய பெயரில் மாற்றுவதோ தீர்வாகாது.

நாட்டில் நல்லிணக்கம், நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் ஜனநாயக ஆட்சியை வலுப்படுத்தும் நோக்கில் இந்தச் சட்டத்தை முழுமையாக நீக்குவதற்கான அரசியல் உறுதிப்பாட்டை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும், இது குறித்து நாடாளுமன்றத்தில் விரிவான விவாதம் இடம்பெற்று அனைத்து அரசியல் கட்சிகளும் கட்சி வேறுபாடுகளைக் கடந்து இதற்கு ஆதரவளிக்க வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

## நீதிபதிகளின் ஓய்வு வயது அதிகரிப்பு; அமைச்சரவையின் அனுமதி இல்லை!

கொழும்பு, ஜூன். 12

மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் உள்ளிட்ட நீதித்துறை கட்டமைப்பில் உள்ள நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை அதிகரிப்பதற்கு அமைச்சரவையின் உத்தியோகபூர்வ அனுமதி பெறப்படவில்லை என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய பல கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

நீதிபதிகள் தவிர ஏனைய தொழில் வல்லுநர்களும் தங்களது ஓய்வுபெறும் வயதை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாக அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக் கோரிக்கைகளை அரசாங்கம் நியாயமான முறையில் பரிசீலித்து வருவதாகக் குறிப்பிட்ட அவர், இவற்றில் சில கோரிக்கைகள் நியாயமானவையாக இருக்கும் அதே வேளை, ஏனையவை அரசியல் பின்னணியைக் கொண்டவை என்றும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இந்த விடயம் தொடர்பில் இதுவரை எந்தவொரு உத்தியோகபூர்வமான தீர்மானமும் எடுக்கப்படவில்லை என அவர் மேலும் வலியுறுத்தினார். (அ)

## தெல்லிப்பளை யூனியன் சம்பியன்!




யாழ்ப்பாணம், ஜூன். 12

மாகாண மட்ட எறிபந்துப் போட்டியில் போட்டியில் முதலாம் இடம்பெற்று சாதனை படைத்துள்ளது தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி.

மாகாண மட்ட எறிபந்து போட்டி நேற்று மன்னார் அடம்பன் மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இப்போட்டியில்,

17 வயதின் கீழ் ஆண்கள் பிரிவில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி வெற்றி பெற்று தேசியமட்டப் போட்டிக்கு தெரிவாகி உள்ளது. இறுதிப் போட்டியில் கனகராயன் குளம் மகா வித்தியாலயத்துடன் போட்டியிட்டு 23:25 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று தெல்லிப்பளை யூனியன் கல்லூரி சாதனை படைத்துள்ளது. (அ)

## முதியோர் இல்லங்கள் தொடர்பாக நாடளாவிய ரீதியில் கணக்கெடுப்பு

கொழும்பு, ஜூன். 12

நாடளாவிய ரீதியில் உள்ள முதியோர் இல்லங்கள் தொடர்பான கணக்கெடுப்பு ஒன்று எதிர்வரும் 15 ஆம் திகதி நடத்தப்படவுள்ளதாக தேசிய முதியோர் செயலகம் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் பதிவு செய்யப்படாத முதியோர் இல்லங்கள் இயங்கி வருவதாகக் கிடைத்துள்ள தகவல்களையடுத்தே இந்த கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

இந்த கணக்கெடுப்பின் போது, முதியோர் இல்லங்களில் தங்கியிருக்கும் 50 வயதிற்குட்பட்ட மாற்றுத்திறனாளிகளை அடையாளம் காண்பதற்கும், அவர்களைப் பொருத்தமான மாற்று வசதிகளுக்கு மாற்றுவதற்கான வழிமுறைகளை ஆராய்வதற்கும் அவதானம் செலுத்தப்படும் என தேசிய முதியோர் செயலகத்தின் பணிப்பாளர் கே.சதுர மிகிதும தெரிவித்துள்ளார்.

மேலும், முதியோர் இல்லங்கள் தொடர்பான வழிகாட்டுதல்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் வரைவு, எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் விளக்கியுள்ளார். (அ)

## மே மாதத்தின் வருமான இலக்கை விஞ்சியது இலங்கை சுங்கத்துறை!

கொழும்பு, ஜூன். 12

2026 மே மாதத்தில் இலங்கை சுங்கத் திணைக்களமானது தனது எதிர்பார்க்கப்பட்ட 187.8 பில்லியன் ரூபா வருவாய் இலக்கினை விஞ்சி 217.9 பில்லியன் ரூபாவை வசூலித்துள்ளது.

இது 16 வீத அதிகரிப்பு ஆகும் என சுங்கத் திணைக்களத்தின் அதிகாரப்பூர்வ தரவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

இந்த வலுவான செயல்பாட்டின் காரணமாக, 2026 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் ஒட்டுமொத்த வருவாய் கடந்த ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் இலக்கை 44 வீதத்தை தாண்டி 1,143.7 பில்லியன் ரூபாவாக உயர்ந்துள்ளது.

கார் இறக்குமதி குறையும் என்ற எதிர்பார்ப்புகளின் காரணமாக, சுங்கத்துறை தனது ஆண்டு இலக்கான 2,207 பில்லியன் ரூபாவில் ஏற்கனவே 51.8 வீதத்தை எட்டியுள்ளது.

இந்த இலக்கு, கடந்த ஆண்டின் சாதனையான 2,551 பில்லியன் ரூபாவை விடக் குறைவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கடுமையான அமுலாக்கம், மேம்படுத்தப்பட்ட மதிப்பீட்டு நடைமுறைகள் மற்றும் பல ஆண்டுகால சுருக்கத்திற்குப் பின்னர் இறக்குமதி அளவுகளில் ஏற்பட்ட மீட்சி ஆகியவையே இந்த அதிகரிப்புக்குக் காரணம் என அதிகாரிகள் கூறுகின்றனர்.

கடந்த ஆண்டு, சுங்கத்துறை தனது திருத்தப்பட்ட இலக்கான ரூ. 2,241 பில்லியனை ரூ. 300 பில்லியனுக்கும் அதிகமாகத் தாண்டியது.

இது 2024 ஆம் ஆண்டின் ரூ. 1,553 பில்லியன் என்ற இலக்கிலிருந்து 64.2 வீத உயர்வாகும். (அ)

## வடக்கின் சர்வதேச வர்த்தக கண்காட்சி எதிர்வரும் 28ஆம் திகதி யாழில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன். 12

வடக்கு மாகாணத்தின் பொருளாதார வளர்ச்சியையும், உள்நாட்டு மற்றும் சர்வதேச வர்த்தக உறவுகளையும் மேம்படுத்தும் நோக்கில் வடக்கின் சர்வதேச வர்த்தக கண்காட்சி எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 28, 29 மற்றும் 30ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையத்தில் காலை 9.00 தொடக்கம் மாலை 5.00 மணிவரை கண்காட்சி நடைபெறவுள்ளது.

நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கண்காட்சியில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் தங்களது உற்பத்திப் பொருள்கள், சேவைகள் மற்றும் தொழில்நுட்பங்களை காட்சிப்படுத்தவுள்ளன. (அ)

## கடந்த 10 நாள்களில் மட்டும் 5000 டெங்கு நோயாளர்கள்!

கொழும்பு, ஜூன். 12

கடந்த 10 நாள்களுக்குள் இலங்கையில் 5,000 இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இது நாட்டின் சுகாதாரக் கட்டமைப்புக்கு ஏற்படும் அழுத்தம் குறித்து சுகாதார அதிகாரிகளிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தற்போதைய இதே நிலை நீடித்தால், வரவிருக்கும் வாரங்களில் மருத்துவமனைகள் தாங்க முடியாத சுமையை எதிர்கொள்ள நேரிடும் என்று தேசிய தொற்றுநோய் தடுப்பு நிறுவனத்தின் சிரேஷ்ட விசேட வைத்திய நிபுணர் டாக்டர் ஆனந்த விஜேவிக்ரம எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

டெங்கு முகாமைத்துவத்தில் இலங்கைக்கு சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட நிபுணத்துவம் உள்ளது. பொதுவாக அங்கொடை வைத்தியசாலை என்று அழைக்கப்படும் தேசிய தொற்றுநோய் தடுப்பு நிறுவனத்தை, ஆசியாவில் டெங்கு நோய்க்கான பிராந்திய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையமாக உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது.

இந்த அங்கீகாரத்தைத் தொடர்ந்து, டெங்கு தடுப்பு மற்றும் முகாமை குறித்த சிறப்புப் பயிற்சிகளைப் பெறுவதற்காக பல நாடுகளைச் சேர்ந்த சுகாதாரப் பணியாளர்கள் இலங்கைக்கு வருகை தந்து வருகின்றனர்-என்றார்.

தடுப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்படாவிட்டால், 2030-ஆம் ஆண்டளவில் இலங்கையில் நோய் மற்றும் மரணத்தை ஏற்படுத்தும் முக்கிய காரணங்களில் ஒன்றாக டெங்கு மாறக்கூடும் என்ற கணிப்புகள் குறித்தும் சுகாதார நிபுணர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (அ)

## இலஞ்சம் பெற்ற 32 அரச அதிகாரிகள் நான்கு மாதங்களுக்குள் மட்டும் கைது!

கொழும்பு, ஜூன். 12

2026 ஜனவரி முதல் ஏப்ரல் மாதம் வரையிலான 04 மாதங்களில் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் 32 அரச அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு மேற்படி தகவலை வெளியிட்டுள்ளது.

மேற்படி காலப்பகுதியில் இலஞ்சம் பெற்ற சம்பவங்கள் தொடர்பாக 70 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும், இவர்களில் 51 பேருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது எனவும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, ஜனவரி முதல் ஏப்ரல் வரையான காலப்பகுதியில், இலஞ்சம் பெற்றமை தொடர்பில் 3,349 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட 314 வழக்குகள், நீதிமன்றங்களில் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதாகவும் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு மேலும் கூறியுள்ளது. (அ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.06.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org